வகுப்பு : 6

தேர்வு எண் | | | | | | |

# மூன்றாம் பருவம்- தொகுத்தறி மதிப்பீடு(SA)-2024-25

நேரம் : 2.00 மணி]

## அறிவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 60

பகுதி – I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10x1=10

1. தங்குதடையின்றி தொங்கவிடப்பட்ட காந்தம் எப்பொழுதும் --------- திசையில் நிற்கும்.
   அ) வடக்கு – கிழக்கு ஆ) தெற்கு – மேற்கு
   இ) கிழக்கு – மேற்கு ஈ) வடக்கு – தெற்கு
2. காந்தங்கள் தன் காந்தத்தன்மையை இழக்க காரணம் ---------
   அ) பயன்படுத்தப்படுவதால் ஆ) பாதுகாப்பாக வைத்திருப்பதால்
   இ) சுத்தியால் தட்டுவதால் ஈ) சுத்தப்படுத்துவதால்
3. பின்வருவனவற்றுள் எது நீர்சுழற்சியின் ஒரு படிநிலை அல்ல?
   அ) ஆவியாதல் ஆ) ஆவி சுருங்குதல் இ) மழை பொழிதல் ஈ) காய்ச்சி வடித்தல்
4. சிமெண்டில் ஜிப்சம் சேர்க்கப்படுவதற்கான காரணம் --------
   அ) விரைவாக கெட்டித்தன்மை அடைய ஆ) கெட்டிப்படும் தன்மையை தாமதப்படுத்த
   இ) கடினமாக்க ஈ) கலவையை உருவாக்க
5. இயற்கையாக ஒட்டும் பொருள் -----------
   அ) புரதங்களில் ஆ) கொழுப்புகளில் இ) ஸ்டார்ச்சியில் ஈ) வைட்டமின்கள்
6. நன்னீர் சூழ்நிலை மண்டலம் எது என கண்டறிந்து எழுதுக.
   அ) குளம் ஆ நதி இ) ஏரி ஈ) இவை அனைத்தும்
7. உயிரினச் சிதைவிற்கு உள்ளாகும் கழிவு ---------
   அ) நெகிழி ஆ) தேங்காய் ஓடு இ) கண்ணாடி ஈ) அலுமினியம்
8. இயற்கையான கொசு விரட்டி ---------
   அ) ஜாதிக்காய் ஆ) மூங்கில் இ) இஞ்சி ஈ) வேம்பு
9. இந்தியாவின் தேசிய மரம் எது?
   அ) வேப்ப மரம் ஆ) பலா மரம் இ) ஆலமரம் ஈ) மாமரம்
10. LINUX என்பது
    அ) கட்டண மென்பொருள் ஆ) தனி உரிமை மென்பொருள்
    இ) கட்டணமில்லா மற்றும் தனி உரிமை மென்பொருள்
    ஈ) கட்டற்ற மற்றும் திறந்த மூல மென்பொருள்

பகுதி – II

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 5x1=5

11. ஒரு காந்தத்திற்கு எப்பொழுதும் ---------- துருவங்கள் இருக்கும்.
12. நீர் ஆவியாக மாறும் நிகழ்விற்கு ---------- என்று பெயர்.
13. உழவனின் நண்பன் என்று அழைக்கப்படுவது --------- ஆகும்.
14. நீர் மாசுபாடு மனிதனுக்கு --------- நோயை உருவாக்குகிறது.
15. ----------- நெசவு நாறுக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

பகுதி – III

III. சரியா? (அல்லது) தவறா? எனக் கூறுக. தவறாக இருப்பின் சரியாக எழுதவும். 5x1=5

16. இரப்பர் ஒரு காந்தப் பொருளாகும்.
17. கடல் நீரினை நேரடியாகப் பாசனத்திற்கு பயன்படுத்தலாம்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

18. NPK என்பது தாவரங்களுக்கான முதன்மைச் சத்துக்கள் ஆகும்.
19. அளவுக்கு அதிகமாக களைக் கொல்லிகளைப் பயன்படுத்தினால் ஒலி மாசுபாடு உருவாகும்.
20. கரும்பு தாவரம் உயிரி எரிபொருளாகப் பயன்படுகிறது.

## பகுதி - IV

IV. பொருத்துக. 5x1=5

21. உயிரினக் கூறுகள் - நிலவாழ் சூழ்நிலை மண்டலம்
22. சாக்கடைக் கழிவுகள் - நில மாசுபாடு
23. செயற்கை உரங்கள் - காற்று மாசுபாடு
24. பாலைவனம் - நீர் மாசுபாடு
25. புகை - விலங்குகள்

## பகுதி - V

V. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. 10x2=20

26. காந்த துருவங்களின் ஈர்க்கும் மற்றும் விலக்கும் தன்மை குறித்து எழுதுக.
27. பொருந்தாதை வட்டமிட்டுக் காரணம் கூறுக.
 மின்தூக்கி, தனியங்கிப் படிகட்டு, மின் காந்த இரயில், மின்பல்பு.
28. ஒப்புமை தருக.
 நிலத்தடி நீர் : ---------- : : மேற்பரப்பு நீர் : ஏரிகள்
29. நீர் சேமிப்பு என்ற தலைப்பில் சில வாசகங்களை உமது நடையில் எழுதுக.
30. பாரிஸ் சாந்தின் பயன்கள் எழுதுக.
31. சிமெண்ட் தயாரிப்பில் ஜிப்சம் எதற்காகப் பயன்படுகிறது?
32. மண்புழு ஏன் உழவனின் நண்பன் என அழைக்கப்படுகிறது?
33. சரியான வரிசையில் எழுதுக.
 முயல் → கேரட் → கழுகு → பாம்பு
34. மறுசுழற்சி அடையக்கூடிய பொருள்களில் எவையேனும் இரண்டினை எழுதுக.
35. மாசுப்பாட்டின் வகைகளைக் குறிப்பிடுக.
36. மருத்துவத் தாவரங்கள் என்றால் என்ன?
37. மரக்கட்டையின் பயன்கள் யாவை?
38. வேப்ப மரத்தின் பயன்களை எழுதுக.
39. வன்பொருள் மற்றும் மென்பொருள் விளக்குக.
40. கட்டற்ற மற்றும் திறந்த மூல மென்பொருள்கள் என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தருக?

## பகுதி - VI

VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3x5=15

41. அ) மின்காந்த தொடர்வண்டி எவ்வாறு இயங்குகிறது?

(அல்லது)

 ஆ) குடிநீர் என்பது யாது? அதன் பண்புகளை பட்டியலிடவும்.

42. அ) வலுவூட்டப்பட்ட சிமெண்ட் காரை மற்றும் அதன் பயன்பாடுகளைப் பற்றி விவரி.

(அல்லது)

 ஆ) சோப்பு எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

43. அ) ஒலி மாசுபாடு பற்றி விவரி.

(அல்லது)

 ஆ) விலங்கு - தாவர இடைவினையின் முக்கியத்துவம் பற்றி விவரி.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner